முருகப்பெருமான் துணை

**மகான் நொண்டிச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.07.2023, திங்கட்கிழமை

1. மனபலம் தந்து அருளும்
   மாக சக்தியாக வந்தநல்
   ஞான குருவே அரங்கமகானே
   ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது நள்ளி திங்கள்
   குறைவிலா அட்டம திகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 08 ம் நாள், 24.07.2023, திங்கட்கிழமை)
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   தேசிகனுக்கு நொண்டிச்சித்தர் யானும்
3. யானுரைக்க வேதமாக அருள
   உயிர்கொலை நீக்கி வாயென
   ஞானம் தருகின்ற தலைவன் நீ
   நம்பிக்கை உன்பால் கொண்ட
4. கொண்டநல் மக்களே தேடி
   குடிலில் சரணாகதி காண
   தொண்டர்கள் என அடையாளம்
   தெளிவுற தருகின்ற ஞானியே
5. ஞானியே உன் கரம்பட தீட்சை
   நல்கி அடைந்தவரெல்லாம்
   ஞானிகள் பூசை செய்யும் தகுதி
   நாளும் நாளும் கூடி உயர்ந்து
6. உயர்ந்துமே மனமாயை கடந்து
   உயிர்கொலை தவிர்த்து உலகில்
   தயவே வடிவான மாந்தர்களாக
   தனித்தகுதி பெறுவரப்பா

7. அப்பா அரங்கா முருகாயென
அழைத்த கணமே அனைவரும்
ஒப்பில்லா ஞானவான்களாக
உயர்மக்களாகத் தேறுவரப்பா

8. அப்பனே அரங்கனுன் வழியில்
அதிசயம் உலகினில் நிகழ்த்த
ஒப்புக் கொண்டு வந்தவர்கள்
ஓங்கார பலம் கொண்டவர்கள்

9. இவர்கள் அனைத்து பேருமே
இணையில்லா ஆறுமுகனார் ஆசிபட
அவதார படைப்புகளப்பா
அரங்கன் நோக்கமே இவர்கள்

10. இவர்கள் நோக்கமாகக் கொண்டு
இயங்கிவரும் உத்தமர்களப்பா
இவர்கள் மேல் சலனம் காணா
இயக்கிவர அரங்கனுன் சேவை

11. சேவை சிறந்து கலியில்
சித்தி காணும் ஞானபலமாக
அவனியில் ஞான ஆட்சி மலர
அனைவருக்கும் வாய்ப்பாக மாறும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—